


# கலையும் கலைஞனும் காலமாகுதலும்

*நெஞ்சிருத்தி*
*நெஞ்சிலுன் முகமிருத்தி*
*முகத்திலுன் முத்தாரச் சிரிப்பிருத்தி*
*நினைக்க நினைவெரிதல் கொடுமையடா!*

*பச்சை இலுப்பை வெட்டி*
*பால் வடியத் தொட்டில் கட்டி*
*தொட்டிலுமோ பொன்னாலே*
*தொடுகயிறோ முத்தாலே*

*காலத் தொட்டிலிலே*
*கண்மணியே கண்வளராய்!*

நாமெல்லாம் உறவுச் சிக்கல்களிலேயே வாழ்வின் பெரும்பகுதியைக் கழித்து விடுகின்றோம். அடுகிடை-படுகிடையான உறவுகள் கிட்டாவிடினும் ஒரு சிலரிடம் மாத்திரம் நமக்கு ஒருவித ஆத்மார்த்த லயிப்பு ஏற்பட்டு விடுகிறது. என்னைப் பொறுத்தவரையில் அப்படித்தான் கலைச்செல்வன். அதனால்தான் கலைச்செல்வன் இறந்துவிட்டான் என்ற செய்தி கிடைத்தபோது அதை நம்பாதிருப்பதற்குரிய சமாதானச் சமன்பாடுகளை எல்லாம் நானும் ராகவனும் போட்டுப் பார்த்தோம் எனக் கருதுகிறேன்.

எண்பதுகளில் புரட்சிக் கனவுகளைச் சூல் கொண்ட ஆயிரமாயிரம் இளைஞர்களில் ஒருவனாக அவன். இலக்கியச் சந்திப்புகளில் தான் அவன் அறிமுகமானான்.

நிலத்தில் இருந்து வேரோடு பிடுங்கி தொட்டிகளில் நாட்டப்பட்ட தொட்டிச் செடிகளாய், நிலத்தையும் மறக்காது இருப்பையும் ஒத்துக் கொள்ளாத ஒருவித அபத்த வாழ்வில் தேடலையும் சுவாசித்தோரில் அவனும் ஒருவன். பள்ளம் சஞ்சிகை, எக்ஸில் வெளியீட்டகம், எக்ஸில் சஞ்சிகை, உயிர்நிழல் சஞ்சிகைகளின் தோற்றுவிப்பாளர்களில் முக்கியமானவனாகவும் இரண்டு குறும்படங்களில் முக்கிய பாத்திரமாகவும், புலம்பெயர் இலக்கியச் சூழலில் அவனாற்றிய காத்திரமான பங்கு மறக்கவோ இருட்டடிப்புச் செய்யப்படவோ முடியாதது.

"உனது செயற்பாட்டால் அசௌகரியப் படுபவர்கள் யார் என்பதை வைத்து நீ எந்தத் திசையில் இயங்கிக் கொண்டிருக்கிறாய் என்பதை அறிந்துகொள்ள முடியும்" என்று கூறுவார்கள்.

புதிய வீச்சுக்களின் அதிர்வுகளைத் தாங்கிக் கொள்ள முடியாத, சமூக, அரசியல், கலையாச்சார நீச்சர்களால் பாரிஸில் உடல் வதைக்காளாக்கப்பட்ட கலைச்செல்வனை அந்த உபாதைகள் தொடர்ந்தன.

உயிரோடு இருக்கும்போது உறவுகளை ஒட்டத் தெரியாத நாம் அவர்களது மரணத்தின்போது அழுது அரற்றுதல் வேடிக்கையானதுதான். உண்மையில் நாம் இன்னொருவரின் மரணத்துக்காக அழும் மனம் வாய்க்கப் பெற்றிருக்கிறோமா?

கலைச்செல்வனின் ஸ்தூல இழப்பு அவனை நேசித்தவர்களுக்கும், அவனால் நேசிக்கப்

பட்டவர்களுக்கும் பேரிழப்புத்தான்.

கடிகார முட்களும் காலண்டர்களும் தாம்தாம் காலம் என்ற பிரகடனங்களை உமிழும்போது, காலம் ஒரு தொடர் நிகழாய் எல்லாவற்றையும் உள்வாங்கி காலகாலமாய் இருக்கிறது.

வாழ்வினதும் மரணத்தினதும் சூக்குமத் திலிருந்து விடுபடுவதற்குத்தான் போலும் நமது முன்னோர்கள் மரணத்தை 'காலமாகுதல்' என்றும் இருத்தலை 'உள்ளல்' என்றும் கண்ட டைந்தார்கள்.

நிகழைக் குறிக்கும் 'உள்ளல்' எனும் சொல்லை இறந்த காலத்திலோ, எதிர் காலத்திலோ பிரயோகிக்க முடியாது. 'உள்ளான்' என்பதை 'உள்ளினான்' என்றோ 'உள்ளுவான்' என்றோ பிரயோகிக்க முடியாது.

அப்படித்தான் கலைச்செல்வனும் எம்மிடையே உள்ளான். எனது கவிதைகளில் தன்னை மிகவும் பாதித்த கவிதையாகக் கலைச்செல்வன் கூறிய கவிதையை அவனது நினைவுகளுடன் சமர்ப்பிக்கிறேன்.



றஜீன்குமார் - கலைச்செல்வன்



கலைச்செல்வன் - றஜீன்குமார்

## பள்ளி எழுமின்! பள்ளி எழுமின்!

என்றோ ஒரு நாள் எழுமெனத்தானோ
இத்தனை காலம் தூங்கிக் கழிக்கின்றோம்

என்றோ ஒரு நாள் எழுமெனத்தானோ
பூகோளத்தின் எல்லாத் திக்கிலும்
தூசிப்படலமாய்-
அந்தந்த நாட்டினர் முகத்தைச் சுழிக்கும்
அகதிப் பிண்டமாய்-
மிதந்தலைகின்றோம்.

எப்போ எழுமென
நாளுமறிகிலோம்
எப்படி எழுமென
குறியுமறிகிலோம்
இப்படி எழுமென
நுண்மான் நுழைபுலம் எதுவுமறிகிலோம்

எப்படி ஆயினும்
நாங்கள் மக்கள்!
திடமாய் இருக்க உறுதி பூண்டனம்!

எல்லாவற்றையும் மறந்து பேசியும்
எல்லாவற்றையும் மறைத்துப் பேசியும்
எல்லாவற்றையும் திரித்துப் பேசியும்
எல்லாவற்றையும் பேசாதிருந்தும்
திடமாய் இருக்க உறுதி பூண்டனம்
திடமெனப்படுகிற ஜடத்தொடு ஜடமாய்.

எங்கெங்கு காணினும்
வரலாறென்பது இரண்டாய் உள்ளது
வார்த்தை கொண்டு எழுதப்படுவதும்
வாழ்வுகொண்டு எழுதப்படுவதும்

வாழ்வுகொண்டு எழுதப்படுவதால்
ஆழ்மன அடியை ஆள்பவன் கவிஞன்.
என்றோ வேண்டாம் இன்றே எழுக!

மானுட விழுமிய கூறுகளனைத்தும்.